# பரி.பவுல்
# அஹமதி தமிழ் திருச்சபை
# குவைத்

" கர்த்தர்
என் மேய்ப்பராயிருக்கிறார்,
நான்
தாழ்ச்சியடையேன். "

சங்கீதம் 23:1

# செய்திமலர்

இதழ்:09 மலர்:31

# JUNE 2026

WWW.AHMADITAMILCHURCH.COM

# முதன்மை ஊழியரிடமிருந்து



## “கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர்”

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் மேலான கிருபையினால் 2026 -ம் ஆண்டின் ஜூன் மாதத்தில் பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம். கடந்த மாதத்திலிருந்து வழக்கம் போல் நம் ஆராதனைகளை நடத்த தேவன் பாராட்டின தயவுக்கும் நன்றி சொல்லுவோம்.

பள்ளிப்படிப்புகளை முடித்து மேற்படிப்பிற்கு செல்லவிருக்கும் சபையின் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். விசேஷமாக அவர்கள் விரும்புகிற படிப்புகளுக்கு ஏற்ற நல்ல கல்லூரிகளில் இடம் கிடைக்க ஜெபிப்போம். நம் மாநிலத்தில் புதிய பொறுப்பாளர்கள் ஆட்சி செய்ய இருக்கிறார்கள். இவர்கள் மக்களுக்கு நல்லாட்சி செய்யவும் நன்மை பயக்கும் திட்டங்களை நிறைவேற்றவும் தடையில்லாமல் ஆட்சி நடைபெறவும் ஜெபிப்போம். போதைப் பொருள் இல்லாத மாநிலமாய் நம் மாநிலம் மாற்றப்பட ஜெபிப்போம்.

தேவனுக்கு பிரியமானவர்களே! நாம் எவ்வளவு உயர்ந்த ஸ்தலங்களில் வேலை செய்தாலும் அதிகமான ஊதியம் பெறுகிறவர்களாக இருந்தாலும் நம் எல்லோரையும் போஷிக்கிறவர் கர்த்தர் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதனால் தான் இயேசு கற்றுக் கொடுத்த ஜெபத்திலும் **“எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்”** (மத். 6:11) என்று இயேசுதாமே அவர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்தார் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நம் வேண்டுதலை கேட்டு நம்மை போஷிக்கும் கர்த்தருக்கு நாம் என்ன கைமாறு செய்கிறோம் என்று எண்ணிப்பார்க்கின்ற போது சங்கீதக்காரன் சொல்வது **“மாம்ச தேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்”** (சங். 136:25) என்று தீர்க்கமாய் நமக்கு கட்டளையாக சொல்வதை நாம் கைக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மேற் சொன்ன வசனத்தின்படி தேவனை துதிக்கும் துதி தொடர்ந்து நம்மில் காணப்பட வேண்டும். இதுதான் நமக்கு மிகுந்த ஆசீரை தேடித்தரும். இதை கைக்கொண்டு தேவ ஆசீரை பெற்றுக் கொள்வோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்
சகோ. ஆரோக்கியதாஸ். P

## தேவ செய்தி

### கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்

நமது மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் வழி நடத்துதலும் நம்மோடு கூட இருப்பதாக. இந்த பகுதியின் மூலம் உங்கள் அனைவரோடும் கூட சேர்ந்து தேவனை மகிமைப்படுத்துகிறேன். பிரியமான தேவ பிள்ளைகளுக்கு இந்த ‘மேய்ப்பன்’ என்கிற வார்த்தை மிகவும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு போதுமானது என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

தாவீது கர்த்தரை என் மேய்ப்பராய் இருக்கிறார் என்கிறான். இயேசு கிறிஸ்துவும் தன்னை **‘நானே நல்ல மேய்ப்பர்’** என்கிறார். இதிலிருந்து நாம் தாவீது சிலுவையின் இடைபடுதலின் கீழுள்ள

ஒரே வாழ்க்கையைப் பிரிதிநிதிப்படுத்துகிறான். தாவீது முற்பிதாக்களின் தலைமுறைகளின் முடிவாகவும் இராஜாக்களுடைய தலைமுறைகளின் துவக்கமாகவும் இருக்கிறான்.

தேவனை அனுதின வாழ்க்கையில் ருசித்தவர்களால் அவரை சுவாசமாக சுவாசிப்பவர்களால் அவரை தன் அனுதின உணவாக உட்கொள்பவர்களால் மாத்திரமே இத்தகைய வார்த்தைகளை கூற முடியும். என் கன்மலை என்பதை காட்டிலும் மேய்ப்பன் என்று உயிருள்ளவராக எப்போதும் உடன் இருப்பவராகவே உணர்ந்து கூறப்பட்ட ஒரு வார்த்தையாகத்தான் நம்க்கு தோன்றுகிறது.

நம் சொந்த வாழ்க்கையில் எல்லா நேரங்களிலும் எல்லாமுமாக இருப்பவரைத்தான் இப்படி அழைக்க(நினைக்க) முடியும். தாவீதும் இப்படித்தான் தன் தனிமை சூழ்நிலை, எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட, தாழ்வாக நினைக்கப்பட்ட, வனாந்திர வறட்சியான வாழ்க்கை, யாருமற்ற தனிமையான பாதை, வாய் பேச முடியாத மந்தைகளின் மத்தியில் வாழ்கின்ற சூழல், இரவில் கொடிய மிருகங்களின் தாக்குதல், பயம் நிறைந்த வேளை, தன்னை மட்டுமல்ல தன்னை சார்ந்த மந்தைகளையும் பராமரிக்க வேண்டிய நிர்பந்த சூழ்நிலை மிகவும் ஏழ்மையான நிலையிலும் தேவனை தன் மேய்ப்பன் என்கிறான். ஏத்தனை ஆழமான வார்த்தை இந்த மேய்ப்பன். வேதத்தின் இரகசியம் மிகவும் அற்புதமானது. தேவபிள்ளைகளே திகட்ட திகட்ட இனிமையானது. ஞானம் நிறைந்தது அதிகமானது வெளிப்பாடுகள் கொண்டது.

தாவீது ஏன் கர்த்தரை தன் ‘மேய்ப்பன்’ என்று சொல்லியிருக்க கூடும் வேதம் தெளிவு படுத்துகிறது. அவன் யோசித்திருக்ககூடும் அவன் வாலிபனோ, அல்லது பராக்கிரமசாலியோ, அல்லது போர் பயிற்சி பெற்ற வீரனோ, அல்ல ஒரு சாதாரண மந்தை மேய்க்கும் ஒரு சிறுவன் எப்படி ஒரு இராட்சதனை வீழ்த்திருக்ககூடும் சிந்தித்து பார்ப்போம். அவன் சிறுவனாய் இருந்தபோதே தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவன், தேவனின் நாமத்தினால் எல்லாம் கூடும். தேவன்

அவனை பார்த்த விதமும், இயேசு கிறிஸ்துவை பார்த்த விதமும் ஒன்றாய் இருந்திருக்ககூடும். அதினால் தான் என்னவோ தேவன் தாவீதுக்கு மேய்க்கும் தொழிலை தந்தார் என்று விசுவாசிக்கிறேன்.

ஒரு **'மேய்ப்பனால்'** தான் தேவனின் பிள்ளைகளை சரிவர மேய்க்க முடியும் என்று தேவன் நினைத்திருக்ககூடும். ஒரு மேய்ப்பன் என்பவன் பெரிய மந்தையை ஞானமாய் வழி நடத்துகிறவர் எங்கே? எப்போது? எப்படி? எதற்காக? என எல்லாவற்றையும் அறிந்து வழி நடத்துகிற மேய்ப்பன். நாம் எங்கே செல்ல வேண்டும், எங்கு கிடைமடக்கப் படவேண்டும், எங்கு பசும்புல் இருக்கிறது என்றெல்லாம் அறிந்தவர் நம் மேய்ப்பன். எந்த வேளையில் எவ்விடத்தில் மேய்ச்சல் இருந்தால் பயமின்றி பசியாற முடியும், எந்த வேளையில் வீடு திரும்ப வேண்டும், எத்தனை நேரம் மேய்ச்சல் இருந்தால் அந்த மந்தைக்கு போதுமானது என நன்கு அறிந்த தேவன்.

மந்தையை எப்படி வழி நடத்த வேண்டும் செம்மறி ஆடுகளையும், வெள்ளாடுகளையும், பகுத்தறிந்து பராமரிக்க வேண்டும் எவ்வாறு முன் விட்டு பின் நடந்தால், அல்லது பின் வரும்படி செய்வதால் என்ன நிலை மந்தைக்கு ஏற்படும் என்று அறிந்த மேய்ப்பன். எந்த விதமான நிலையில் மந்தை உள்ளது என்பதை அறிந்து அதற்கு தேவையான இடம் எது என உணர்ந்து மூலிகை நிறைந்த இடமா, பசும்புல் நிலமா, தெளிந்த நீரோடையா, அமர்ந்த தண்ணீரண்டையா என அறிந்து நடத்துகிற மேய்ப்பன். எந்த சூழ்நிலை, பகைவரின் கைக்கு நீங்கலாக்க கூடும்படி தன் ஆடுகளின் சத்தம் கேட்டு அவைகளின் தேவையை அறிந்த மேய்ப்பன். அவைகளுக்கு பசியா, தாகமா, பகைவரால் ஏதேனும் ஆபத்தா, இல்லை பிரசவ வேதனையா என நன்கு அறிந்து கொள்வான். தன் மந்தையில் நடக்க முடியாத கால்கள், தேகத்தில் ஏதேனும் முறிவுகள், ரணமான பாதங்கள், பிறவியிலே ஊனமான ஆடா என அறிந்து நம்மை தோள்களில் சுமந்து செல்லும் உன்னத மேய்ப்பன்.

தன்னால் பசியாற முடியாத போது தமது கோலினால் மரக்கிளையை வளைத்து உண்ண உதவி செய்யும் உத்தம மேய்ப்பன். அதே கோலினால் நாம் தடமாறி போகும் போது தட்டி கொடுத்து நம்மை நேர் வழியில் நடத்தும் மேய்ப்பன். எதிரிகள் வந்தால் சிறிதும் அஞ்சாது மந்தையை காக்க போராடும் வீர மேய்ப்பன். மந்தைக்காக தன் ஜீவனையும் கொடுக்கும் நல்ல மேய்ப்பன். நமது காயம் கட்டும் கல்வாரி மேய்ப்பன். தேவ பிள்ளைகளே, தாவீதை பாருங்கள், அவன் அந்த ' மேய்ப்பன் ' என்ற வார்த்தையை சொன்னதற்கான அர்த்தம் மிகவும் ஆச்சர்யத்தை தருகிறது.

மேய்ப்பனின் அற்புதமான குணாதிசயங்களை நன்கு அறிந்தவனாகிய தாவீது தேவனை 'என் மேப்பன்' என்றான். மேய்ப்பன் என்பவன் தன் மந்தைகளின் மேல் நோக்கமாயிருப்பதும், நேர்மையான வாசல் வழியாய் மந்தையினுள் பிரவேசிப்பதும், அதன் வாசலாய் இருப்பவனும் அதை காக்கவும், பராமரிக்கவும் கண்டித்து உணர்த்துவதும், தேவைப்படும் போது வாசலை அடைக்கவும், அதை திறக்கவும் செய்து அந்த மந்தைகளை நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க செய்கிறான்.

ஆகவேதான் (தாவீதின் குமாரனாகிய) இயேசு கிறிஸ்துவும் தன்னை **'நானே நல்ல மேய்ப்பன்'** என்றார். தேவனை தன் மேய்ப்பனாய் கொண்ட ஜனம் ஒரு போதும் தாழ்ச்சியடைவதில்லை. ஆவிக்குரிய ஜீவிதமோ, உலக ஐசுவரியமோ ஒன்றும் குறைவுபடாது. அவருடைய அன்பை ருசித்த நாம் அதனை அடுத்தவருக்கும் கொண்டு செல்ல வேண்டியது நம்மீதுள்ள தேவ திட்டமாயிருக்கிறது. அந்த தேவ திட்டத்தை நிறைவேற்ற தேவன் கிருபை புரிவாராக. ஆயத்தமாவோம் ஆயத்தப்படுத்துவோம்.

கர்த்தர் கிருபையில்

Sis. நகோமி ஜான்சன்

# தேவ சித்தமா இல்லையா (God's Will or Not)

## 1. தேவனின் விருப்பத்தில் நடப்போம்

நாம் தேவனுடைய வழியில் நடக்கும் போது அவர் சித்தம் அறிந்து செயல்படும் போது அவர் நம்மை வழி நடத்த வல்ல தேவனாய் காணப்படுகிறார். சங் 37:23_ல் வாசிக்கிறோம். நீங்கள (தவீதைப் போல) தேவனுடைய வழியை பின் பற்றி நடக்கிறவர்களாயிருந்தால் அதில் தேவன் பிரியப்படுகிறவராயிக்கிறார். நாம் தேவனுடைய சித்தத்தின் படி அவர் காண்பித்த வழிகளில் நடக்க பிரயாசப்படும் போது எதிர்பாராத அலை போன்ற சோதனைகள் நமக்கு நேரிடும் போது விசுவாசத்தோடு தேவனிடத்தில் கேட்கும் போது பேதுருவை எப்படி நடுக்கடலில் கரம் பிடித்து நடத்தினாரோ (மத் 14:30_31) அதே போல் நம்மையும் நடத்த வல்லவராயிருக்கிறார். யாக் 1:6_ல் சொல்லப்பட்டது போல விசுவாசத்தோடு தேவனிடத்தில கேட்கிறதை தருவார் என்கிற விசுவாசத்தோடு அவரிடத்தில் சேர்வோம்.

தேவன் நம்மை உள்ளங்கையில் வரைந்து வைத்து(ஏசாயா49:16) நம்மை காண்கிற தேவனாயிருக்கிறார்.நம் செயல்கள் சிறியதாகவோ பெரியதாகவோ இருந்தாலும் தேவன் காண்கிறவராக இருக்கிறார. ரோமர் 8:20_ன் படி சகலமும் நன்மைக்கேதுவாய் முடியச் செய்கிறவராய் இருக்கிறார். தேவனுக்கு பிரியமாக அவர் விரும்பும் வழிகளில் நாம் நடக்கும் போது சங் 1:3_ன் படி நம் காரியத்தை வாய்க்கச் செய்கிற தேவனாயிருக்கிறார்.

## 2. நம்முடன் இருக்கும் தேவன்.

தேவன் தந்த இந்த உலக வாழ்க்கை எளிதல்ல அவர் தேவனுடைய அதிசயமான வழிநடத்துதலின் படி நடக்கும் போது

சங் 16:11_ல் ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்தினீர் என்ற வார்த்தையின் படி நடத்தி மகிழ்ச்சியும் சந்தோஷமும் காணும் படி செய்வார். நாம் இருக்கிற இந்த வனாந்திரமான தேசமாயினும் தனிமை என்கிற எண்ணம் தோன்றினாலும் கர்த்தர் எப்போதும் நம்மோடிருக்கிறார். அது தான் நமக்கு இருக்கிற ஒரே ஆறுதல். மத்28:20 இயேசு சொல்கிறார் இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று சொல்கிறதை பார்கிகறோம்.

கர்த்தருடைய வார்த்தைகள் நம் இருதயத்தில் இருக்கும் போது சங் 119:105_ன் படி நம் கால்களுக்கு தீபமாக பாதைக்கு வெளிச்சமாக காணப்படுகிறது மீகா 7:8_ல் வசனம் இப்படியாக சொல்கிறது நான் இருளில் உட்கார்ந்தாலும் கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் இது தான் நாம் பெற்ற பாக்கியம். வாலிபர்களாகிய நாம் தேவனுக்கு பிரியமாய் நடந்து ஆவியில் கனிகளை பெற்றுக்கொண்டு பரிசுத்தமாய் தேவனுக்கு உகந்த ஜீவபலியாய் ஒப்புக்கொடுக்கும் போது எல்லா கண்ணிகளுக்கும் நம்மை தப்புவித்து அவருடைய சித்தத்தின் படி நம்மை அவர் வழிநடத்த வல்ல தேவனாய் காணப்படுகிறார். ரோமர் 2:12 ஒவ்வொரு நாளும் உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

தேவன் உங்களை அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவின் பணியில்**

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

இதோ, பரலோகத்திலே
சாட்சியின் கூடாரமாகிய
ஆலயம் திறக்கப்பட்டது,

வெளி 15:5





## Church Inauguration Report
## Christ Church, Handibhanga Village, Bhubaneswar (Odisha, India)
### Inauguration Date: 22 February 2026

**Travel and Traditional Welcome**



By the grace of God, I had the opportunity to attend the Church Inauguration Ceremony held on 22 February 2026 at Handibhanga Village near Bhubaneswar, Odisha.
The journey from Bhubaneswar Airport to Handibhanga village took nearly 7 hours by road through remote hilly areas.
On arrival at the village on 22 February 2026, the HO tribe community warmly welcomed me with their traditional tribal dance on both sides and flower spraying.
As part of their custom, they respectfully removed my shoes and socks, washed my feet, applied mustard oil, cleaned them, and helped me wear my shoes again.
It was a deeply moving experience reflecting their love and hospitality.

**Church Opening Ceremony**





The inauguration ceremony on 22 February 2026 began with an opening prayer, followed by unveiling the nameplate of "Christ Church – Handibhanga Village",
Following the ribbon-cutting ceremony, the congregation reverently walked around the new church three times, after which I unlocked the church door padlock and the doors were officially opened. After entering the church, we conducted a dedication prayer inside the new church
Due to space constraints inside the church, a temporary tent and stage were arranged nearby where the main program was conducted.
The program included prayer, worship songs, Bible message, traditional dance, and felicitation of church elders and the family who generously sponsored the church land.

…Continue 16th Page

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

சகோ. ஜான் கெட்சன்
செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வன். வெங்கடேஷ் ராஜன்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோ. ராபின்ராஜ்
செல்வி. ஆஸ்லின் கெசியா
சகோ. ராஜன் ராஜையன்
சகோ. ஜஸ்டின்
செல்வன். கிங்ஸ்டன் ஐசக்
செல்வன். ரயான் சதீஷ்குமார்
சகோ. ஞான விஜயன்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ.A.ஆரோக்கியதாஸ் (Camp)
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
சகோ. கிரன் குமார்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்

செல்வன். ஸெர்வின் டைடஸ் சிவகுமார்
செல்வன்.வினோத் வடிவேலு
செல்வன். ஆன்ரோனிக் ஜான்சன்
சகோதரி. பிரமீளா சந்தோஷ்குமார்
சகோ. பக்தராஜ்
செல்வன். ஆகாஷ் பாலமுருகன்
செல்வன். ஜோஷ்வா ஜான்சன்
சகோதரி. ஷீபா பிரசாத்
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. எபிஷா ஜோனி எபிநேசர்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
சகோதரி.பிரிமிதா ரூத் பிருகிதா
சகோதரி. பாக்கியா ரவிஜான் பீட்டர்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி. கிரேஸ் ஜோய்ஸ் பிராங்ளின்
செல்வன். கவின் ஆண்டனி
சகோ.கிறிஸ்டோபர் . M
செல்வன். டால்டன் விபின்
சகோ. ஜஸ்டீன்
செல்வன். பெஸ்டஸ் சாலமன் முருகன்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி/திரு. பால் ஜெகநாதன் & பியூலா மெர்ஸி
திருமதி/திரு. சதீஷ்குமார் எத்திராஜ் & சசிரேகா
திருமதி/திரு. M. யேசுதாஸ் & நிர்மலா
திருமதி/திரு. டேவிட் ஜெயகுமார் & செலின்
திருமதி/திரு. ஜெரேமியா & நித்யா
திருமதி/திரு. மகேஷ் ராஜ் & ஜீவரத்தினம்
திருமதி/திரு. ராஜ் & சங்கீதா
திருமதி/திரு. வினோத்குமார் & பிரதீபா

# 2026 – ஜீன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/6/2026 | Sis. அல்ஜியா தாமஸ் | Sis. எப்சி சாம் ஆனந்த் |
| 14/6/2026 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ. சாம் சுந்தர் |
| 21/6/2026 | Sis. ஷீபா பிரசாத் | Sis. டெய்சி எபினேசர் |
| 28/6/2026 | சகோ. ஜான்சன் | சகோ. கிறிஸ்டோபர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/6/2026 | சகோ. சுபின் சிங் | சகோ. ஆண்டனி |
| 12/6/2026 | சகோ. வேலு ராமர் | சகோ. ரவி ஜான் பீட்டர் |
| 19/6/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/6/2026 | சகோ. V. எபினேசர் | சகோ. ஸ்டாலின் |

### ஆராதனை ஒழுங்குகள்

சங்கிலி தொடர் ஜெபம்

04/06/2026 மாலை 6:00 முதல் 05/06/2026 காலை 6:00 வரை

**11/06/2026**
முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல்
அதிகாலை 1:00 மணி வரை

**20/06/2026**
சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி – தீத்து

**26/06/2026**
வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி–சங்கீதம்– 116 To 150 வரை

**27/06/2026–Saturday**
Area Prayer Cell
Time-6:30-7:30

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
( June முதல் August வரை விடுமுறை )

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 ஜீன் மாதத்திற்கான வேத வினா!



**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. பெலிஸ்தரைப் பெற்றவர்கள் யார் ?
2. எதினால் கர்த்தர் யூதாவின் மூத்த குமாரனாகிய ஏர் என்பவனைக் கொன்றார் ?
3. பெத்தலகேமின் மூப்பன் யார் ?
4. பேர் பேராய் எழுதப்பட்ட யூதா வம்சத்தார் எதைத் தேடும்படிக்குத் தேதோரின் எல்லையாகிய பள்ளத்தாக்கின் கீழ்ப்புற மட்டும் வந்தனர் ?
5. சாலொமோன் எருசலேமில் கட்டின ஆலயத்தில் ஆசாரிய பணிவிடைச் செய்தவன் யார் ?
6. யூதா கோத்திரத்தார் எங்கே சிறை பிடித்துக் கொண்டு போகப்பட்டார்கள் ?
7. தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்தவன் யார் ?
8. புத்தியும் படிப்புமுள்ள மனுஷன் யார் ?
9. தாவிதின் ஞானதிருஷ்டிக்காரன் யார் ?
10. கர்த்தர் ராஜரீக மகத்துவத்தை யாருக்குக் கட்டளையிட்டார் ?
11. எது தாவீதின் நகரமாயிற்று ?
12. சவுலின் எலும்பை எந்த மரத்தின் கீழ் அடக்கம் பண்ணினர் ?
13. யூதாவும் எருசலேமும் சிறைபிடிக்கப்பட்ட போது சிறைப்பட்டுப் போனவன் யார் ?
14. யோவேலின் குமாரனாகிய பாடகர் யார் ?
15. சவுலின் நாட்களில் எதை தேடவில்லை ?

விடைகளை வருகின்ற 20-06-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
“ I நாளாகமம் ”

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026- மே மாத வேத வினாவுக்கு விடை

1. நீதியுள்ளது – எபிரேயர் 1:8
2. மனுஷனை – எபிரேயர் 2:7
3. அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் – எபிரேயர் 3:12
4. தேவகுமாரனாகிய இயேசு – எபிரேயர் 4:14
5. சகாயஞ் செய்யும் கிருபை – எபிரேயர் 4:16
6. பிரதான ஆசாரியன் – எபிரேயர் 5:3
7. விசுவாசிக்க வேண்டும் – எபிரேயர் 10:39
8. யோசேப்பின் குமாரரை – எபிரேயர் 11:21
9. கலக்கம் – எபிரேயர் 12:15
10. கிருபையினாலே – எபிரேயர் 13:9
11. கிறிஸ்துவின் ஆசாரியத்துவம்
12. சபை கூடி வருதலை – எபிரேயர் 10:25
13. தேவனால் – எபிரேயர் 5:4
14. வெள்ளாட்டுக்கடா,இளங்காளை – எபிரேயர் 9:12
15. பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை எபிரேயர் 10:14

## 2026- மே மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. சுகந்தி தம்புக்குமார்
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. சாந்தி
சகோதரி. பத்மினி வர்க்கீஸ்

சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோ. ராஜா துரை

## கடாட்சம்

தேவனுடைய கடாட்சத்தைப் பெற்ற (லூக்கா 1:24) எலிசபெத்தின் வாழ்க்கையில் மூலமாக சில காரியங்களை இந்த பகுதியில் பார்ப்போம். எலிசபெத் லேவி கோத்திரத்துப் பெண் ஆசாரியனின் மணைவி ஊழியம் செய்யும் குடும்பத்தில் உள்ள பெண். இந்த வேளையிலும் எலிசபெத் வாழ்க்கையிலிருந்து சில காரியங்களை கற்றுக்கொள்வோம்.

### 1. தேவனோடுள்ள உறவு

கணவனாகிய சகரியாவிற்கு தேவனால் பிறக்க இருக்கும் குமாரனுக்கு ஒரு பெயரை வெளிப்படுத்துகிறார். அவர் ஊமையான போதும் எலிசபெத் அதே பெயரை பரிந்துரைப்பதை பார்க்கிறோம். இந்த நிகழ்வை கண்டு குடும்பத்தினர் ஆச்சிரியப்பட்டார்கள். தேவனோடு நாம் நெருக்கமாக இருக்கும் போது குடும்பத்திலும், ஒரே சிந்தனை, ஒரே பார்வை, ஒரே தீர்மானங்களை எடுக்க ஆவியானவர் உதவி செய்கிறார். இப்படிப்பட்ட குடும்பத்தின் ஒருமனம் சுற்றி இருப்பவர்களுக்கு ஆச்சர்யமாகவே இருக்கும் குடும்பத்திலும் சமாதானம் இருக்கும்.

### 2. விசுவாச வாழ்க்கை

எலிசபெத்திற்கு மரியாளைப் போலவோ, சகரியாவைப் போலவோ, ஒரு தூதன் தோன்றி கூறும் அனுபவம் இல்லை. ஆனாலும் வயதுசென்ற தனக்கு கர்ப்பம் தங்கினபோதோ விசுவாசமாக ‘என் தேவன் என்மேல் கடாட்சம் வைத்தார்’ என கூறி அந்த பாதையில் தொடந்து 6 மாதம் வரைக்கும் கவனமாக இருப்பதையும், இனத்தாளாகிய மரியாளுக்கு ஒரு ஆலோசனைக்காரராக இருப்பதையும் பார்க்கிறோம். மரியாள் சந்திக்க வரும் போது இயேசுவைப் பற்றி தீர்க்க தரிசனம் சொல்வதையும் பார்க்கிறோம்.

## 3. உன்னத அனுபவம்

லூாக்கா 1:24-ம் வசனத்தில் என் தேவன் நிந்தையை நீக்கும்படியாக என்மேல் கடாட்சம் வைத்தார் என்று தன்னுடைய வாழ்வில் மற்ற சராசரி பெண்ணிற்கு கிடைத்தது, எனக்கும் கிடைத்தது என்று நினைத்திருக்கிறாள். தேவனை மகிமையும் படுத்தியிருக்கிறாள். ஆனால் தேவன் அந்த ஆசீர்வாதத்தில், மிகப் பெரிய அவருடைய ராஜ்யத்தின் திட்டத்தை வைத்திருந்தார். அவளுக்கு கிடைத்த கடாட்சம் கருவிலேயே இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்த கடாட்சம் அநேக ஜனங்களுக்கு மனம்திரும்புதலை சொல்லப்போகின்ற தேவனுடைய பாத்திரம்.

அந்த பிள்ளை வளர வளர இன்னும் அதிகமாக எலிசபெத் தேவனை மகிமை படுத்தி இருப்பார்கள். தேவன் தாமதித்தாலும் தன்னை அதற்காக பயன்படுத்தியதை என்றும் நினைத்து இருப்பார்கள். தாமதமானாலும் தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.

கர்த்தர்தாமே எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

**Sis. அனிதா திவ்யராஜ்**

## உங்கள் விசுவாசம்

**உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும் (லூக்-8:48)**
**நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவா-11:40)**
**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1-யோவா-5:4)**
**உங்கள் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது (மத்-9:29)**
**விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் (மாற்கு-9:23)**
**விசுவாசித்தினாலே நீதிமான் பிழைப்பான். (எபி-10:38)**
**விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசா-28:16)**

இதோ, பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது,

வெளி 15:5



**Ministry Among the HO Tribe**

The people of this region belong to the HO tribe, and their language is also HO.
All FMPB leaders translated the message into the HO language for the congregation during the inauguration program held on 22 February 2026.
The testimony shared by the family who donated the land for the church was very touching, his Name Mr. Panu Munda,



The church key was prayerfully handed over to the Church Leader, Mr. Rabin Munda, who will be responsible for conducting the church services regularly
Another great miracle is that the HO tribal leader Mr. Vijay Munda himself is a believer in God.
This new church ministry will be conducted by the HO tribe believers themselves with the support of FMPB leadership.



**Faith in the Midst of Poverty**

The economic condition of the people in this region is very poor.
Most of them work in hill mining labor and receive daily wages between ₹400 and ₹500.
Their houses are made of mud walls, tree branches, and clay tile roofing.
Despite their challenges, they donated land for the church, collected ₹3.25 lakhs for the inauguration function held on 22 February 2026, and contributed an additional ₹3 lakhs to complete the church construction work.



**Appeal to the Congregation**



Seeing their faith and dedication demonstrated during the inauguration on 22 February 2026, I humbly request our congregation to prayerfully consider supporting this mission work.
Even a minimum contribution of  KD per person can help support tribal believers, strengthen this new church construction, and establish more churches among unreached tribal communities.
**In Christ By – Sam Ananth, Church Building Missionary, ATC, Kuwait**



# Kids Corner

## JUNE MONTH QUIZ FOR CHILDREN

1. Who replaced Judas Iscariot as an apostle ?
2. On which day did the Holy Ghost come up on the disciples ?
3. What did Peter say before Healing the lame man ?
4. By What name did Peter say people must be saved ?
5. What were the names of the husband and wife who lied to the Holy Ghost ?
6. Who was full of faith and Power ?
7. Who kept the clothes of those who stoned Stephen ?
8. What did Saul hear from Heaven ?
9. Who was raised from the dead by Peter ?
10. Who was the centurion that Feared God ?
11. In which city were the disciples first called Chritians ?
12. In Lystra whom did the people call Mercurius ?

***Kids Find the answer from the Book of***

**“ Acts Chapter 1-13 ”**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !
தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாஸ் கருணா அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்க்ளின் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும், ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும், கொடுத்து ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
நன்றி

# ANSWER'S FOR THE MONTH OF MAY

1. To offer whatever comes out of his house as a burnt offering - Judges 11:30,31
2. His Daughter - Judges 11:34
3. Shibboleth - Judges 12:6
4. Lion - Judges 14:5,6
5. Honey - Judges 14:8
6. Jaw bone of a Donkey - Judges 15:15
7. His Uncut hair Judges 16:17
8. 1100 Shekels of silver - Judges 17:2
9. Idol - Judges 17:4
10. 600 - Judges 20:47

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.

Luke 18:16

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF MAY

Adriel
Andrea
Felisha
Feshika
Mahendrika
solomon

Srinithi
Aran Rajaselvan
Ebisha
Dion
Vincy
Abel Raj

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO. ஆரோக்கியதாஸ் . P**
99870126

### செயலாளர்

**BRO. தாமஸ்**
66810423

### பொருளாளர்

**BRO. ஜான்சன்**
97610275

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M. கிறிஸ்டோபர்**
67096449

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS. டெய்சி எபினேசர்**
60686612

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**

யோவான் 12:26


**Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com**
**Church Website Address - ahmaditamilchurch.com**

**<u>Church Postal Address</u>**
**Your Name**
**PO.Box.No.46795**
**Fahaheel-64018**
**Kuwait.**